அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RCOP: 40/2017

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.சா.1 | 07.04.2026 |
| பெயர் உமேத்ராஜ் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. மனுசொத்தில் நான் 1996 காலத்தில் இருந்து தற்போது வரை வாடகைக்கு உள்ளேனா என்றால் இந்த மனுசொத்தில் இல்லை. 01.11.1996 அன்று வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியபோது நான் வாடகைக்கு மனுசொத்தில் இருந்தேனா என்றால் மனுசொத்தில் ஒருபகுதியில் மட்டும் வாடகைக்கு இருந்தேன். மேற்படி வாடகை ஒப்பந்தம் செய்தபோது என்ன வேலை செய்தேன் என்றால் சப்னா பேக்கேஜிங் இன்டஸ்டிரி என்ற பேக்டரி நடத்திகொண்டு இருந்தேன். தற்போது எனது சொந்த இடத்தில் பேக்டரி நடத்துகிறேன். அ.வ.எண் 993/2023 என்ற வழக்கில் மாண்புமிகு சார்புநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

(மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)